21
Eastern University

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதல் கலைமாணித் தேர்வு 1999/2000 (வெளிவாரி)
## (டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

## TL 101 தமிழ் இலக்கிய வரலாற்று அறிமுகமும் குறிப்பிடப்பட்ட பாட நூல்களும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலுமிருந்தும் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பகுதி –I

01. (அ) கி.பி.4ஆம் நூற்றாண்டின் ஆரம்பம்முதல் 6ஆம் நூற்றாண்டின் இறுதிவரை தமிழில் தோன்றிய இலக்கியங்கள் எவை?

(ஆ) அவற்றுள் அதிகமானவை அற இலக்கியங்களாக அமைந்தமைக் கான காரணங்களை விளக்குக.

(இ) அக்காலத்தில் தோன்றிய தொடர்நிலைச் செய்யுள்கள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக?

02. (அ) கி.பி. 14ஆம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டு வரை தமிழில் தோன்றிய இலக்கியங்களின் பண்புகளை வகைப்படுத்துக.

(ஆ) அக்காலப் பக்தி இலக்கியங்களை பல்லவகாலப் பக்தி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு மதிப்பிடுக.

03. (அ) நாவல்களின் தோற்றத்திற்கு காரணமாக இருந்த 19ஆம் நூற்றாண்டின் சமூக பண்பாட்டு பின்னணியை விளக்குக.

(ஆ) தமிழில் தோன்றிய ஆரம்பகால நாவல்கள் பற்றி யாது கூறுவீர்?

04. பின்வருவனவற்றுள் இரண்டு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(அ) புதுமைப்பித்தன் சிறுகதைகள்
(ஆ) பாரதிதாசன் கவிதைகள்
(இ) தமிழில் நவீன நாடகம்
(ஈ) தமிழில் இலக்கிய விமர்சனம்
(உ) தமிழில் பெண்கள் இலக்கியம்

## பகுதி –II

05. பின்வரும் குறுந்தொகைச் செய்யுளை வாசித்து அதன்கீழ் வரும் வினாக்களுக்கு விடை அளிக்குக.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யார.். தறிந்திசி னோரே சாரற்
**சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ**
**ளுயிர் தவச் சிறிது காமமோ பெரிதே**

(அ) பாடலின் உரையை எளிய நடையில் தருக.
(ஆ) தடித்த எழுத்தில் காணப்படும் தொடரின் அணியை விளக்குக.
(இ) இப்பாடல் எத்திணைக்கு உரியது.

06. இராவணனின் குணாம்சங்கள் கும்பகர்ணன் வதைப்படலத்தினூடாக வெளிப்படுமாற்றை விளக்குக

07. சிலப்பதிகார கால இடைச் சேரிமக்களின் வாழ்க்கை முறையை விபரிக்குக.

08. பாரதியின் கவிதைகள் தமிழ்க் கவிதை மரபில் ஏற்படுத்திய மாற்றங்களை மதிப்பிடுக.

09. நீலாவணன் கவிதைகளின் பிரதான பண்புகளை விளக்குக.